සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025 / Second Term Test - 2025

ශ්‍රේණිය / தரம் / Grade: 10

# இஸ்லாம் I, II

කාලය / நேரம் / Time: 03 மணி

නම / பெயர் / Name ..............................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ....................................

அறிவுறுத்தல்கள் :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்களுக்கும் நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தைக் கொண்டுள்ள வட்டத்தினுள் புள்ளடியை (X) இடுக.

---

01) "தக்பீர் தஹ்ரீமா" என்பது,

1. பெருநாள் தக்பீர்
2. ஆரம்பத் தக்பீர்
3. தொழுகைளிலுள்ள தக்பீர்கள்
4. நிலைக்கு வரும்போது சொல்லும் தக்பீர்

02) ஈமானில் மிகவும் உயர்ந்த நிலை

1. தன் சகோதரனுக்கு உதவி செய்தல்
2. பாதையில் இடர் தரும் பொருட்களை அகற்றல்
3. லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா
4. பிறருக்குக் கடன் கொடுத்தல்

03) "துஆஉல் இஸ்திப்தாஹ்" என்பது,

1. ஸூரதுல் பாதிஹா
2. அத்தஹிய்யாத்
3. வஜ்ஜஹ்து
4. குனூத்

04) உள்ளத்தை அசுத்தப்படுத்தும் விடயங்கள்

1. பொறாமை, அன்பு, பெருமை
2. உதவி, குரோதம், தப்பெண்ணம்
3. குரோதம், பணிவு, நேசம்
4. தப்பெண்ணம், பொறாமை, பெருமை

05) குல்லதைன் நீரின் அளவு

1. 105 லீற்றர்
2. 200 லீற்றர்
3. 210 லீற்றர்
4. 110 லீற்றர்

06) ஒரு முஸ்லிமிற்கு நிறைவேற்றுமாறு பணிக்கப்பட்டுள்ள மூன்று வகையான பொறுப்புக்களாவன

1. இபாதத், கிலாபத், கியானத்
2. இபாதத், இமாரத், கிலாபத்
3. கித்மத், இமாரத், கிலாபத்
4. இபாதத், தப்லீஹ், கிலாபத்

07) "முஹாபழதுஸ்ஸலாஹ்" என்பதன் கருத்து

1. தொழுகையைப் பேணுதல்
2. தொழுகையை நிலைநாட்டல்
3. தொழுகையை விடுதல்
4. தொழுகையைப் பிற்படுத்தாமை

08) “அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வசுக்ரிக வஹுஸ்னி இபாததிக” என்ற துஆவை நபியவர்கள் ஓதிய முக்கிய சந்தர்ப்பம்

1. தஹஜ்ஜுதில்
2. பர்ழான தொழுகைகளின் பின்
3. பிரயானத்தின்போது
4. கஷ்டங்களின்போது

09) அன்போடு தொடர்பான அல்லாஹ்வின் திருநாமங்களாவன

1. அர்ரஹ்மான், அல் ஜப்பார், அல் வதூத்
2. அர்ரஹ்மான், அர்ரஹீம், அல் வதூத்
3. அர்ரஹ்மான், அர்ரஹீம், அல் அலீம்
4. அல் குத்தூஸ், அர்ரஹீம், அல் வதூத்

10) “தாருல் ஃபனா” என்பதன் கருத்து

1. நிலையான உலகம்
2. கப்ருடைய வாழ்வு
3. அழியக்கூடிய உலகம்
4. மஹ்ஷர் தினம்

11) நபியவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த ஆண்டு

1. கி.பி. 510
2. கி.பி. 720
3. கி.பி. 610
4. கி.பி. 650

12) முதல் வஹி இறங்கியபோது நபித்துவத்தை உறுதிப்படுத்திய கதீஜா(ரழி)ன் உறவினர்

1. அபூதாலிப்
2. அபூபக்கர் (ரழி)
3. வலீதிப்ன முகீரா
4. வரகதிப்னு நவ்பல்

13) மதீனாவின் பழைய பெயர்

1. ஷாம்
2. கூபா
3. யத்ரிப்
4. ஸிரியா

14) நபியவர்களின் இறுதி ரமழானில் ஜிப்ரீல் (அலை) மூலம் நபியவர்கள் அல் குர்ஆனை சரிபார்த்துகொண்டபோது கூடவே இருந்த ஸஹாபி

1. அபூபக்கர் (ரழி)
2. ஸைத் இப்னு ஸாபித் (ரழி)
3. முஸ்அபிப்னு உமைர் (ரழி)
4. உமர் (ரழி)

15) அபூபக்கர் (ரழி) காலத்தில் தொகுக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதி, உமர் (ரழி)வினால் ஒப்படைக்கப்பட்ட ஸஹாபிப் பெண்மனி

1. ஹப்ஸா (ரழி)
2. ஆயிஷா (ரழி)
3. பாதிமா (ரழி)
4. ஸைனப் (ரழி)

16) உஸ்மான் (ரழி) காலத்தில் அல்குர்ஆனைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியம் பற்றி கலீபாவிடம் முறையிட்ட ஸஹாபி

1. ஸைத் இப்னு ஸாபித் (ரழி)
2. முஆதிப்னு ஜபல் (ரழி)
3. முஸ்அபிப்னு உமைர் (ரழி)
4. ஹுதைபதுல் யமானி (ரழி)

17) உள்ளத்தின் வகைகள்

1. 3 வகைகள்
2. 2 வகைகள்
3. 5 வகைகள்
4. 6 வகைகள்

18) யமாமா யுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட மிக முக்கிய நிகழ்வு

1. குர்ஆன் ஒன்றுதிரட்டப்படல்
2. ஹாபிழ்கள் மரணம்
3. உமர் (ரழி)ன் பதவியேற்பு
4. ஹதீஸ் தொகுக்கப்படல்

19) கஃபாவை நிர்மானித்த நபியின் பெயர்

1. இப்றாஹீம் (அலை)
2. இஸ்மாஈல் (அலை)
3. ஆதம் (அலை)
4. இஸ்ஹாக் (அலை)

20) நபியவர்கள் இரகசியமாக தஃவா செய்த காலம்

1. 5 வருடங்கள்
2. 3 வருடங்கள்
3. 2 வருடங்கள்
4. 10 வருடங்கள்

21) ரோம சாம்ராஜியத்தின் சக்கரவர்த்திகளில் ஒருவர்

1. நஜ்ஜாஷி 2. சால்ஸ் 3. ஹிர்கீலியஸ் 4. 2ஆம் உமர்

22) நுபுவ்வத் ஐந்தில் ஹபஷாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை

1. 100 பேர் 2. 40 பேர் 3. 15 பேர் 4. 5 பேர்

23) A பகுதியை B பகுதியுடன் இணைக்குக.

| A | B |
|---|---|
| 1. தாருல் பகா | A அழியக்கூடிய இவ்வுலகம் |
| 2. ரஹ்பானிய்யா | B துறவறம் |
| 3. முத்தகி | C நிலையான மறுமை |
| 4. தாருல் பனா | D பயபக்தியாளர் |

1. DCAB 2. CBAD 3. CBDA 4. BDAC

24) அகபா உடன்படிக்கையின் பின் யஸ்ரிப் வாசிகளுடன் அனுப்பிவைக்கப்பட்ட நபித்தோழர்

1. ஸல்மான் (ரழி) 2. உஸ்மான் (ரழி) 3. ஸஃத் (ரழி) 4. முஸ்அப் (ரழி)

25) நோன்பாளி நுழையும் சுவனவாயல்

1. பாபுஸ் ஸலாம் 2. பாபுர் ரய்யான 3. பாபுல் ஜன்னா 4. பாபுல் பிர்தௌஸ்

26) "ரஹ்மதுல் லில் ஆலமீன்" என அல்குர்ஆன் கூறுவது

1. முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு 2. அல்லாஹ்வுக்கு

3. ஸஹாபாக்களுக்கு 4. நபியவர்களின் குடும்பத்தினருக்கு

27) தஃவாவுக்கான முதற் கட்டளை இடம்பெற்றுள்ள ஸூரா

1. ஸூரதுல் அலக் 2. ஸூரதுல் முஸ்ஸம்மில்

3. ஸூரதுல் பாதிஹா 4. ஸூரதுல் முத்தஸ்ஸிர்

28) "முஜாஹததுந் நப்ஸ்" என்றால்

1. எழுத்தால் போராடுதல் 2. ஆயுதப்போராட்டம்

3. உளப்போராட்டம் 4. பணத்தால் போராடுதல்

29) பூமியை வளப்படுத்தும் பணி அழைக்கப்படுவது

1. இபாதத் 2. இமாரத் 3. தப்லீஃ 4. கிலாபத்

30) "ஜாமிஉல் குர்ஆன்" என அழைக்கப்படும் ஸஹாபி

1. உஸ்மான் (ரழி) 2. அலி (ரழி) 3. பிலால் (ரழி) 4. உமர் (ரழி)

31) சட உலகுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்ட மலக்குகள், ஜின்கள், ஷைத்தான்கள், ரூஹ் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ள அகீதாவின் பகுதி

1. அர் ரூஹானிய்யாத் 2. அஸ்ஸம்இய்யாத் 3. அல் இலாஹிய்யாத் 4. அந்நுபுவ்வாத்

32) இஸ்லாமிய அகீதாவைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அறிஞர்கள்

1. இமாம் மாலிக், அபுல் ஹஸன் அல் அஷ்அரி, அபூ மன்ஸூர் அல் மாதுரூதி.

2. இமாம் அஹ்மத், இமாம் ஹஸனுல் பஸரி, அபூ மன்ஸூர் அல் மாதுரூதி.

3. இமாம் அஹ்மத், அபுல் ஹஸன் அல் அஷ்அரி, அபூ மன்ஸூர் அல் மாதுரூதி.

4. இமாம் தஹாவி, அபுல் ஹஸன் அல் அஷ்அரி, இமாம் மாலிக்.

33) நபியவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த ஆண்டு,

1. கி.பி. 600 2. கி.பி. 510 3. கி.பி. 630 4. கி.பி. 610

34) தயமுமின் உறுப்புக்களின் எண்ணிக்கை

1. நான்கு 2. மூன்று 3. ஆறு 4. இரண்டு

35) இஸ்லாத்தில் இரண்டாவது மூலாதாரமாகக் கருதப்படுவது,

1. ஸுன்னா 2. அல்குர்ஆன் 3. இஜ்மாஉ 4. கியாஸ்

36) முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கப் பயன்படுத்தும் பொருத்தமான சொல்

1. ஸுன்னா 2. ஸீரா 3. தாரீஹ் 4. ஹதீஸ்

37) ஜாஹிலிய்யாக்காலத்தில் கஃபாவைப் பரிபாலித்து வந்த கோத்திரம்,

1. அவ்ஸ் 2. குரைசி 3. கஸ்ரஜ் 4. யூதர்கள்

38) "எதியோப்பியா" என அழைக்கப்படும் பிரதேசம்,

1. மக்கா 2. மதீனா 3. ஹபஷா 4. தாயிப்

39) A பகுதியை B பகுதியுடன் இணைக்குக.

| A | B |
|---|---|
| 1. முதநப்பி | A போலிநபி |
| 2. முத்ஆ | B நஜ்ஜாசி |
| 3. சுஊப் | C தற்காலிகத் திருமணம் |
| 4. ஹபஷா | D வேதத்தை எழுதுவோர் |
| 5. குத்தாபுல் வஹி | E கிளைகள் |

1. CAEBA 2. ACEBD 3. DAEBC 4. CEABD

40) தமது தூதை எத்திவைப்பதற்காக நபியவர்கள் பயன்படுத்திய குன்று

1. ஹிரா 2. மர்வா 3. ஸபா 4. ஜபலுந் நூர்

(1X40= 40)

PAST PAPERS WIKI



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025 / Second Term Test - 2025

ශ්‍රේණිය / தரம் / Grade: 10

# இஸ்லாம்

කාලය / நேரம் / Time:

නම / பெயர் / Name ..........................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ......................................

## பகுதி – II

அறிவுறுத்தல்கள்:

- முதலாம் வினா கட்டாயமானதாகும்.
- முதலாம் வினா தவிர இன்னும் நான்கு வினாக்களைத் தெரிவுசெய்து விடையளிக்க.

---

(01) சுருக்கமான விடை தருக.

1. மாணவர்களாகிய எங்களிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. நேர்வழி பெற்ற அகீதாப் பிரிவுகள் இரண்டைக் குறிப்பிடுக.
3. பர்ழு கிபாயாவுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
4. அன்பு வைத்தலின் இரு வகைகளும் யாவை?
5. இஸ்லாம் வலியுறுத்தும் நற்பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.
6. முஸ்லிம்கள் கொண்டாடும் இரு பெருநாள் தினங்களும் யாவை?
7. ஈகையின் மூலம் கிடைக்கும் பேறுகள் மூன்றைக் குறிப்பிடுக.
8. "தர்தீபுத் திலாவத்", "தர்தீபுந் நுஸூல்" என்பதன் கருத்துக்கள் யாவை?
9. "பைஅதுல் அகபா" என்னால் என்ன?
10. "ஹனீப்" எனப்படுவோர் யாவர்?

(2X10= 20)

(02)

1. "ஜபீரத்" என்றால் என்ன?
2. நீரின் வகைகள் மூன்றையும் உதாரணங்களுடன் குறிப்பிடுக.
3. அன்றாட வாழ்வை இபாதாவாக மாற்றிக்கொள்வதற்கான நிபந்தனைகளைக் குறிப்பிடுக.

(2+3+5= 10)

(03)

1. “தஸ்கியா” என்றால் என்ன?

2. ஒரு முஸ்லிமின் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகள் ஆறைக் குறிப்பிடுக.

3. ஸூரதுல் புர்கானில் இடம்பெற்றுள்ள நற்பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(2+3+5= 10)

(04)

1. “அல் வரஉ” என்றால் என்ன என்பதை விளக்குக.

2. வஹி அருளப்பட்ட முறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

3. தௌபாவிற்கான நிபந்தனைகள் நான்கைக் குறிப்பிடுக.

(2+3+5= 10)

(05)

1. “இஜ்மாஉ” என்றால் என்ன?

2. இஜ்மாஉவின் வகைகளையும் அதன் கருத்துக்களையும் புறிப்பிடுக.

3. அர்கானுல் கியாஸ் நான்கையும் கருத்துடன் குறிப்பிடுக.

(2+3+5= 10)

(06)

1. உஸ்மான் (ரழி) அவர்கள் “ஜாமிஉல் குர்ஆன்” என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

2. ஜாஹிலிய்யாக் கால மக்களிடம் காணப்பட்ட நற்பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

3. துணை மூலாதாரங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(2+3+5= 10)

(07) பின்வருவனவற்றுள் இரண்டுக்குச் சிறு குறிப்பு எழுதுக.

1. ஸுஹ்த்
2. நப்ஸுல் லவ்வாமா
3. ஜாஹிலிய்யா
4. தியாகம்

(5+5= 10)



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300



Rs : 300



Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE